## இரயில் பயணங்களின்போது வழக்கமாகக் காணும் காட்சிகளை வருணித்து எழுதுக.

ரயில் தண்டவாளத்தின் மீது செல்லும் மெல்லிய சத்தத்தை மக்களின் பேச்சு சத்தம் மறைத்துவிடும். அங்கும் இங்கும் மக்கள் நிற்க, இந்த ரயில் பயணம் அவர்களுடைய வாழ்க்கையில் எவ்வித பாதிப்பையாவது கொடுக்கிறதா என்ற கேள்வி சிந்தனையில் தோன்றும் . இருக்கைகளிலோ, நின்றுகொண்டோ பள்ளிக்குச் செல்லும் அல்லது வீட்டிற்குத் திரும்பும் சில உயர்நிலை மாணவர்கள் தங்கள் வீட்டுபாடங்களை அவசர அவசரமாகச் செய்து கொண்டிருப்பர். அங்கும் இங்கும் என்ன நடக்கிறது என்று காணாமல் தங்கள் வேலையில் மூழ்கி இருப்பர். தங்கள் முகங்களை ஒரு கடினமான கேள்வி வருகின்றபோது சுளிப்பது, வேலை முடித்தபிறகு சிரிப்பது, நிறுத்ததை மறந்துவிட்டோமா என்ற பதற்றத்துடன் மேலே இருக்கும் வரைபடத்தைத் தேடுவது, மறக்கவில்லை என்று பெருமூச்சு விடுவது ஆகியவை காண்பதற்கு ஒருவித கேளிக்கையாக அமையும். மற்ற மாணவர்கள் காதுகேள் பொறிகளைக் கொண்டு தங்கள் கைத்தொலைபேசியில் பாட்டு கேட்டுக்கொண்டோ, விளையாடிக்கொண்டோ, சமூக ஊடகத்தைக் கண்டுகொண்டே இருப்பர். இவர்களைப்போல நாமும் ஒரு காலம் இருந்தோம் என்ற சிறிய விழிப்புணர்வு மனதை வந்தடையும்.

சிறு குழந்தைகளையும் தொடக்கநிலை மாணவர்களையும் காணும்பொது சிலருக்கு மகிழ்ச்சி ஏற்படும்; சிலர் எரிச்சல் கொள்வர். இப்பிள்ளைகள் ரயிலில் இருக்கும் ஒரு வித அமைதியை நீக்கி, தங்கள் பேச்சென்ற இசையால் ரயிலில் இருக்கும் அனைவரையும் கவர்ந்திடுவர். சிறு குழந்தைகளின் எழில்நிறைந்த மழலைக் குரல்களும், தொடக்கப்பள்ளி மாணவர்களின் உற்சாகமான குரல்களும் மனதை கவராமல், ஒருவரைச் சிந்திக்கத் தூண்டாமல், பழைய காலத்தை நினைவூட்டாமல் இருந்தது என்று கூறுவது கட்டுக்கதை விடுவதற்குச் சமம் என்று கூறலாம். வாழ்க்கையின் நுணுக்கங்களையும் அது கொண்டு வரும் சவால்களையும் காணாத கண்கள், அடுத்து என்ன தேர்வு வரும், அம்மா மதியத்திற்கு என்ன சமைத்துவைத்திருக்கிறார் என்று எண்ணும் சிந்தனை, காயங்கள் காணாத உடல், இவற்றை எல்லாம் அவர்களுடைய தூய்மையான மனதைக் காணும்போது நம் மனமும் ஒரு வித அழுத்தம் நீங்கியது போல உணரும்.

வேலையிலிருந்து திரும்பும் அல்லது வேலைக்குச் செல்லும் மக்களின் முகங்களில், ஓடும் படங்களை நின்று பார்த்துக்கொண்டே இருக்கலாம். அத்தனை எண்ணங்கள், கவலைகள், உணர்ச்சிகள் ஒரு நொடியில் முகத்தில் நாட்டியம் ஆடுவதைக் காண்பதையே ஒரு வித பொழுதுபோக்காகக் கொள்ளலாம். பரபரப்பான வேளையில் எறும்புகள் ஊர்ந்து செல்வது போல இவர்களும் ரயிலின் பல மூளைகளுக்குச் செல்வர். கைத்தொலைபேசியில் சிலர் தங்கள் குடும்பத்தினருடனோ, வேலையாட்களுடனோ மெல்லிய குரலுடன் உரையாடிக்கொண்டிருப்பர். சிலர் கண்கள் தூக்கக்கலக்கத்துடன் தவிக்கும், சிலர் கண்கள் அதனுடன் போராடமுடியாமல் மூடிவிடும். பைகளை இறுக்கிப் பிடித்துக்கொண்டு சிலர் ரயிலில் என்ன நடக்கிறது என்று உற்று நோக்குவர். இவர்கள் அனைவருக்கும் குடும்பத்தைத் தாங்கவேண்டிய சூழ்நிலையா அல்லது தங்கள் மகிழ்ச்சிக்காக வேலை செய்ய செல்கிறார்களா என்பது போல பல ஐயங்களை மூளையினுள் எழுப்பத் தூண்டுவது இம்மக்களே. வாழ்க்கையின் ஒரு முக்கிய பருவத்தில் இருப்பவர்கள் இவர்கள்; இவர்களைப்போல நாமும் இருந்தால் எப்படி இருப்போம், நம் தோற்றம் எப்படி இருக்கும் என்று மனம் ஆசைபடத் தொடங்கும். ரயில் பயணத்தில் சிறிது நேரம் மட்டுமே காண்கிறோம். ஆனால், காணும் காட்சி இவர்கள் எவ்வளவு உழைக்கிறார்கள் இவர்களைப் போலத்தானே நம் பெற்றோரும் உழைப்பர் என்று எண்ணிக் கடமையாற்றத் தூண்டும்.

வயது முதிந்தோர் ரயிலில் காண்பது ஓர் அரிய சம்பவமாகத்தான் இருக்கும். ஆனால், அவர்களுடைய முகங்களில் இருக்கும் சுருக்கங்கள் அவர் பட்ட வேதனையையும் கொண்ட மகிழ்ச்சியையும் காட்டும் ஒரு புத்தகமாக அமைந்துவிடும். அவர்களின் கைகளைத் தொட்டுப்பார்த்தால் அவர்கள் பல வருடங்களாகப் பட்ட கஷ்டத்தை உணரலாம். குடும்பங்கள் தாங்கிப்பிடித்த கைகள் இன்று ஓய்வெடுக்கின்றன. அவர்களைக் கண்டும் காணாதது போல சிலர் திரும்பிவிடுவர். ஆனால், மற்றவர்கள் இவர்களுக்குத் தகுந்த மரியாதையைச் செலுத்துவர். இவர்களின் வலுவிழந்த உடலும் சாந்தமான மனநிலையும் அருகில் இருக்கும் அனைவருடைய கவனத்தையும் ஈர்க்கும். அவர்களுக்கு இடம் கொடுக்க முன்வருவர். இவர்களைக் காணும்போது ஒரு வித மரியாதையும் பாசமும் மனதிலிருந்து தானாகவே உதிக்கும். வயதோடு வரும் அனுபவ அறிவு மரியாதையைத் தேடிக் கொடுக்கிறது போல.

இப்பலவித மக்கள் அனைவருக்கும் ஒன்றுமட்டும் பொதுவாக அமைகிறது. ஆயிரம் வேறுபாடுகள் இருந்தும் அனைவரும் கண்களை மூடிக்கொண்டு ரயில் அவர்களைப் பாதுகாப்பாகச் சேர வேண்டிய இடத்திற்கு கொண்டு சேர்க்கும் என்று நம்புகிறார்கள். ரயில் தன் வயதினால் சில இடங்களில் கொஞ்சம் கரைபிடித்திருக்கும். மக்கள் மிதித்த இடங்கள் மிதிக்காத இடங்களைவிட ஒரு மென்மையான நிறம் கொண்டிருக்கும். கால்தடம் சில இடங்களில் தெரியும். அழகிய நிறங்களில் வரும் ரயில் இருக்கைகள். ஒரு சோபா போல சுகமாக இல்லாவிடிலும், ரயில் இருக்கைக்கென்று ஒரு தனி சுகம் உள்ளது. அதிகநேர அலுவலக வேலைக்குப் பிறகு சோர்வுடன் ரயிலுக்குள் செல்லும்போது அவ்விருக்கை தெய்வம் தந்த வரம் போலத் தோன்றும் . அங்கும் இங்கும் கைப்பிடி. தொட்டுப் பார்த்தால் ஐஸ் கட்டி போல குளிர்ந்திருக்கும்; தொடும்போது கைகளிலிருக்கும் எல்லா சூட்டையும் உடனே இழுப்பது போல இருக்கும். அதுவும் ஒரு விதத்தில் மகிழ்ச்சி அளிக்கக்கூடியதாகவே அமையும். ஜில் என்ற காற்று குளிர் சாதனத்திலிருந்து வரும்; சூடான நாள் பிறகு ஆர்க்டிக் பனியில் இருப்பது போலத் தோன்றும். ரயில் காற்றிற்கென்று ஒரு தனி சுவை உள்ளது. உலர்ந்த காற்று ஆனால் பல வாசனைகள், ஓர் இடத்திலிருந்து பழ வாசனை தோன்றும், இன்னொரு இடத்திலிருந்து பூவாசனை வரும். ஆங்கிலத்தில் சிம்போனி என்பர்; இசை படைக்க பல வித இசைக் கருவிகள் ஒன்று சேர்கின்றன, அதைப்போலவே ரயிலின் காற்றும். அதைச் சரியாக வருணிக்கப் பல பக்கங்கள் தேவை. அப்படி இருந்தாலும் அதை அனுபவித்தாலொழிய அதைப் புரிந்துகொள்ள முடியாது.

ஒவ்வொரு நிறுத்தத்திலும் பரபரப்பான மக்கள் ஏறுவர்; இறங்குவர். ஆனால், அம்மாற்றத்திற்கு எதிர்மாறாக அமைவது ரயில் பயண அனுபவம் ஆகும். சிங்கப்பூரின் வெயில் காலம் உச்சி மண்டையை ஓர் அடுப்பாகவே மாற்றக் கூடியது. வெயில் இல்லாவிட்டால் குளித்தவனையே மீண்டும் குளிப்பாட்டும் மழை. ரயில் உள்ளே சென்ற பிறகு இவை இரண்டின் தொல்லைகளிலிருந்து ரயில் காப்பது போலத் தோன்றும். உள்ளே இருந்துகொண்டு பச்சை நிறம் கொண்ட கண்கவரும் மரங்களையும் பல அற்புதமான வண்ணங்கள் கொண்ட கட்டடங்களையும் காணும்போது நம் முன்னே உலகம் தானாக சுற்றுவது போலத் தெரியும். சிறு வயதில் ரயிலில் செல்லும்போது நிலா பின்னால் தொடர்வது போல காட்சியளிப்பதை யாரால் மறக்க இயலும்? கண் மூடிக் கண் திறப்பதற்குள் இடத்தை அடைந்ததும் பெறும் சந்தோசம் அதை யாரால் மறக்க இயலும்? இதைப்போன்ற பல உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் தூண்டுவது ரயில் பயணம்.

ரயில் பயணம் எழில் மிக்கது. ஆனால் உலகம் செல்லும் வேகத்தில், அதை ரசிக்க நேரம் போதவில்லை என்பது கவலைப்படத் தூண்டுகின்ற ஒன்று தான்.

**********************